ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

காஞ்சிபுரம் மாவட்டம்

## குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்

## ஊராட்சி ஒன்றிய இரவுக் காவலர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை

ந.க.எண்.8886/2019/அ1 நாள். 18.11.2019

காஞ்சிபுரம் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியத் தலைப்பில் காலியாக உள்ள இரவுக் காவலர் பணியிடத்தினை பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 18.11.2019 முதல் 02.12.2019 அன்று பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | - | இரவுக் காவலர் |
| 2. | சம்பளம் | - | ரூ.15700-50000(Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் இதர படிகளுடன் |
| 3. | வயது | - | 01.07.2019 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் |
| | அதிகபட்ச வயது வரம்பு (01.07.2019 அன்று உள்ளவாறு) | - | |
| | பொதுப்பிரிவு | - | 30 வயதிற்குள் |
| | BC/MBC | | 32 வயதிற்குள் |
| | SC/ST பிரிவு | - | 35 வயதிற்குள் |
| 4. | மொத்த பணியிடங்கள் | - | 1 |
| 5. | இட ஒதுக்கீடு விவரங்கள் | - | **General Turn (பொதுப் போட்டி) - 1** |
| 6. | கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகள் | - | எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 7. | விண்ணப்ப படிவம் | - | இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை https://kancheepuram.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 8. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள் | - | 02.12.2019 பிற்பகல் 5.45 மணி வரை |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இரவுக்காவலர் பணியிடத்திற்கான விண்ணப்பத்தினை https://kancheepuram.nic.in இணையதளத்தில் அல்லது தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணைதளத்தில் (National Career Service Portal) www.ncs.gov.in பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, 18.11.2019 முதல் 02.12.2019 அன்று பிற்பகல் 5.45 மணி வரை ஆணையாளர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.
3. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் உள்ள விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

18.11.19

ஆணையாளர்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்.